DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C :264/2019** | |
| Prosecution Witness | | | : | **PW -26** | |
| Name | : | விஜயகுமார் | Caste | : | |
| Father's Name | : | | Calling | : | ஆய்வாளர் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of March 2023. 20-03-2023

(எதிரிகள் 1, 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 05/06/2019 ஆம் தேதி அம்மாபேட்டை காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது, அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண் 208/2019, ச/பி 147, 148, 323, 324, 302 இதச வழக்கின் விசாரணை நகலை பெற்று, சம்பவயிடம் காலை 7 மணிக்கு சென்று, சாட்சிகள் குருமூர்த்தி, தியாகராஜன் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.சா.ஆ.12 மற்றும் அ.சா.ஆ.13 ஆகும்.** அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சம்பவயிடத்தில் கைப்பற்றக்கூடிய தடயப்பொருட்கள் எதுவும் காணப்படவில்லை. பின்னர் சாட்சிகள் குருமூர்த்தி, தியாகராஜன், முருகேசன், சக்தி வடிவேல், ராஜா, தனபால், மாலதி, பிரவீன்குமார், தனிகாஜலம், வெற்றிசெல்வன், நடராஜன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி

மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சாட்சி கோபிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 9.30 மணிக்கு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவகிடங்கில் வைத்து இறந்து போன நந்தகோபால் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மகாலிங்கம், குணசேகரன், குப்புசாமி, திருநாவுக்கரசு, பழனி ஆகியோர்முன்பு பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணையின் போது நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான். **அது அ.சா.ஆ–14** ஆகும். பின்னர் மேற்படி நபரின் இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு வேண்டுகோள் கடிதம் தயார் செய்து, தலைமை காவலர் 2893 உதயன் என்பவர் மூலம் பிரேத பிரிசோதனை செய்ய சட்டம் சார்ந்த மருத்துவரிடம் ஒப்படைக்குமாறு அறிவுரை கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 07/06/2019 ஆம் தேதி காலை 6 மணியளவில் தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் பின்புறம் அருள்மொழிபேட்டை சாலையில் வைத்து வழக்கு எதிரிகளான முத்துகுமார், தனபால், ஜெயசங்கர், ராதாகிருஷ்ணன், சசிக்குமார், உமாவதி ஆகியோரை போலிஸ் பார்ட்டி சகிதம் கைது செய்து, அதில் எதிரி முத்துகுமார் என்பவர் சாட்சிகள் சண்முகசுந்தரம், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க, தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் முன்பு பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி முத்துக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் வழக்கின் தடயப்பொருட்களை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 15 ஆகும்**. பின்னர் அவரை அழைத்து சென்று, மாரியம்மன்கோவில் ரயில்வே ஸ்டேசன் அழைத்து சென்று, அங்கு முற்புதரில் மறைத்து வைத்திருந்து, அவர் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த 4 தைல மரக்கட்டைகளை சாட்சிகள் முன்பு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுது தான்.

அது **அ.சா.ஆ– 16 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் கட்டைகள்–4 நான் அன்று கைப்பற்றியது தான். அது ஏற்கனவே சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு அந்த மரக்கட்டைகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க 07/06/2019 ஆம் தேதி காவலர் மூலம் படிவம் 95 இன் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படி**வம் 95 அ.சா.ஆ. 16 ஆகும்.** பின்னர் எதிரி மற்றும் வழக்கு தடயப்பொருளுடன் நிலையம் வந்து, எதிரிகளை திரேக பரிசோதனை செய்து, நிலைய பாராவிடம் ஒப்படைத்தேன். பெண் காவலர் மூலம் பெண் எதிரி உமாவதி யை திரேத பரிசோதனை செய்து, உச்ச நீதிமன்ற கட்டளையை நிறைவேற்றினேன். பின்னர் எதிரிகளை தகுந்த கைது வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பெண் கைதியை பெண் தலைமை காவலர் 114 மற்றும் 1298 ஆகியோர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த அனுப்பி வைத்தேன். சாட்சிகள் சண்முகசுந்தரம், கோபாலகிருஷ்ணன், கண்ணதாசன், தங்கசாமி, தலைமை காவலர் 2893 உதயன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 01/07/2019 ஆம் தேதி கோபிநாதன் Assistant Engineer, தமிழ்நாடு மின்சார வாரியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு தடயப்பொருள்களை 02/08/2019 ஆம் தேதி சி.பி 67/2019 இல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. வழக்கின் இளம் பிழையாளி சந்தோஷ் இளஞ்சிறாரர் நீதி குழுமத்தில் ஜாமீன் பெற்றுள்ளார். பின்னர் 05/08/2019 ஆம் தேதி மருத்துவர் செந்தில் குமார், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ அதிகாரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் புவனேஷ்வரி மற்றும் மருத்துவர் கோபிநாத், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தமிழ்மணி, விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பெண் உதவி ஆய்வாளர் விஜயராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் 07/08/2019 ஆம் தேதி வட்டார தடய அறிவியல் அலுவலர் காயத்திரி மற்றும் சித்ரா துணை இயக்குநர், வேதியல்

ஆய்வாளர் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு உடல் உள்ளுறுப்புகளின் ஆய்வறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.சா.ஆ.17 ஆகும்.** பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து குற்ற புலனாய்வு துணை இயக்குநர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று 29/08/2019 ஆம் தேதி எதிரிகள் முத்துக்குமார், தனபால், ஜெயசங்கர் ஆகியோர்கள் மீது பிரிவு 147, 148, 324, 302 இதசவின் படியும், எதிரிகள் ராதாகிருஷ்ணன், உமாவதி, சசிக்குமார் ஆகியோர் மீது பிரிவு 147, 323, 302 உ/இ 149 இதசவின் படியும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். இளம் பிழையாளி சந்தோஷ் என்பவர் மீது பிரிவு 147, 148, 324, 302 இதசவின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்து, இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.